DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No.CC.No.188/2022**

**prosecution witness: PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused absent. Petition filed.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சுமன் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

06.08.2024

முதல் விசாரணை:–

1.நான் இராமநாதபுரம் ஓம்சக்தி நகரில் வசித்து வருகிறேன். நான் safe trackல் வாடகை காரை ஓட்டி வருகிறேன். எதிரியை தெரியும் கடந்த 20.09.2021ம் தேதி மதியம் 01.00 மணியளவில் எதிரி எங்கள் safe trackல் வாடகை கார் புக் செய்திருந்தார். நான் உடனே இராமநாட்டில் உள்ள FSM Super market அருகில் அவரை ஏற்றுவதற்காக காத்திருந்தேன் அவர் காலதாமதமாக மாலை 04.00 மணிக்கு மற்றும் மூவருடன் சேர்ந்து வந்தார். அவர்களை நான் ஏற்றிக்கொண்டு தனுஷ்கோடிக்கு மாலை 06.00 மணிக்கு சென்றேன். அங்கு காவலர் மாலை 06.00 மணிக்கு மேல் அனுமதிக்க முடியாது என்று கூறிவிட்டார். உடனே எதிரி மற்றும் மூவரும் காவலருடன் சண்டைக்கு போனார்கள்.

2. உடனே நான் கம்பெனிக்கு போன் செய்து கஸ்டமர் போலீசுடன் சண்டை போடுவதாக தகவல் தெரிவித்தேன். பின்னர், அவர்களை அங்கிருந்து அழைத்துக்கொண்டு வந்தபோது அவர்கள் மண்டபம் பத்ரகாளியம்மன் கடற்கரைக்கு செல்லும்படி கூறினார்கள். பின்னர் அங்கு எதிரி மற்றும் மூவரும் மது அருந்திவிட்டு என் கார் சாவியை பறித்து வைத்துவிட்டார்கள். பின்னர் என்னை கன்னத்தில் அறைந்தார்கள்.

3.உடனே 100க்கு போன் செய்து போலீசுக்கு தகவல் சொன்னேன். உடனே மண்டபம் காவல்நிலையத்தில் இருந்து ஒரு ஏட்டையா வந்தார், அவரிடமும்

எதிரி சண்டை போட்டார். பின்னர் எதிரி மற்றும் அவரது நண்பர்களை மண்டபடம் காவல்நிலையம் அழைத்து சென்று எதிரியிடம் இருந்த என் கார் சாவியை பெற்று தந்தார்கள்.

4.பின்னர் என்னை தகாத வார்த்தையால் பேசி, அடித்த எதிரி மீது நடவடிக்கை எடுக்கு நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் மனு அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**</u>

1.புகார் மனுவில் சொன்னததைத்தான் தற்போது முதல்விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரை யார் எழுதிக்கொடுத்தார் என்றால் ஒரு ஏட்டையா எழுதிக்கொடுத்தார். அவர் பெயர் தெரியாது. அதில் என்ன எழுதியிருந்தது என்று முழுவிபரமும் எனக்கு தெரியுமா என்றால் படித்து பார்த்தேன். நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். யார், யார் பெயரில் புகார் கொடுத்தேன் என்றால் சனவாஸ் மற்றும் மூன்று நபர்கள் மீது கொடுத்தேன். அந்த மூன்று நபர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. புகார் மனுவில் அந்த மூன்று நபர்களின் பெயரை சொல்லியுள்ளேன். அந்த மூன்று நபர்களுடன் நான் சமாதானமாக போய்விட்டு தற்போது அவர்களை தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. சனவாஸ் என்பரை வழக்கு சம்பவத்திற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால சரிதான். எதிரி வெளியூர்காரர் என்றால் சரிதான். மற்ற மூன்று நபர்களும் இராமநாதபுரம் என்றால் சரிதான். வாகனத்தை புக் செய்தவரும் இராமநாதபுரத்ததை சேர்ந்தவர்தான், வாகனத்தை யார் புக் செய்தது என்றால் பெயர் தெரியாது. எனக்கு யார் வாகனத்தை புக் பண்ணினார் என்ற விபரம் நன்றாக தெரியும் அவர் பெயரை சொல்லக்கூடாது என்பதற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் பாலா என்பவர் என்னை கன்னத்தில் அறைந்தார் என்று புகார் கொடுத்துவிட்டு குற்ற சம்பவத்திற்கு சம்பந்தமில்லாது ஷானவாஸ் என்பவர் மீது புகார் கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. அதன்பிறகு ஷானவாஸ் என்பவரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஷானவாஸ்க்கும், எனக்கும் எந்தவித பழக்கமோ, தொடர்போ கிடையாது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் அவர் என்னிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர் தான் சாவியை பிடுங்கினார். என்னுடன் பிரச்சனை செய்தவர்கள் உள்ளூர்காரர்கள் என்பதால் அவர்கள் மீது புகார் கொடுத்துவிட்டு தற்சமயம் சமாதானமாகிவிட்டு ஷானவாஸ் மீது பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல குற்ற சம்பவத்திற்கும், எதிரிக்கும் எந்த வித சம்பவமும் இல்லை என்றால் சரியல்ல. அந்த நபர்கள் அழைத்தால் தான் ஷானவால் வந்தார் என்றால் சரிதான்.

4.போலீசார் என்னை அன்றைய தினம் விசாரித்தார்கள் அதன்பிறகு விசாரிக்கவில்லை. எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்று 08.00 மணிக்கு விசாரித்தார்கள். நான் சொல்வது போல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், புகார் கொடுத்து compensation பெறாமல் என்பதற்காக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும், எதிரி நிரபராதி என்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.